செய்தி வெளியீடு எண்:1234 நாள்:29.11.2021

## செய்தி வெளியீடு

## நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 27-11-2021 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், நாட்டின் ஜவுளி வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கை தமிழ்நாடு உள்ளடக்கியுள்ளது என்றும் இந்தியாவில் நூல் விலை கடுமையாக அதிகரித்துள்ளதால் ஆடை ஏற்றுமதி மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இந்த நூல் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டில் 2-வது பெரிய தொழிலான ஜவுளித் துறையில் பல நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்படுவதுடன் வேலை இழப்புகளும் பெரிய அளவில் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

2021-22 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் 5% அடிப்படை சுங்க வரி, 5% விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரி மற்றும் 10% சமூக நல வரி விதிக்கப்பட்டதால், ஒட்டுமொத்த இறக்குமதி வரி 11% ஆக உயர்ந்ததே பருத்தி விலை ஏற்றத்திற்கான ஒரு முக்கிய காரணமாக கருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, ஜவுளித் தொழிலைப் பாதுகாக்கவும், வேலை இழப்பைத் தடுத்திடவும் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் தலையிட்டு பின்வரும் கொள்கை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

I. ஊகவணிகத்தைத் தவிர்க்க ஏதுவாக பருத்திக்கு விதிக்கப்படும் 11% இறக்குமதி வரியை நீக்க வேண்டும்.

II. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மின்னணு ஏலத்தில் (e-auction) பங்கு பெற ஏதுவாக, தற்போதுள்ள விதிமுறைகளை தளர்த்தி குறைந்தபட்சம் 500 பருத்தி பேல்கள் போதுமானது என்ற வகையில் வணிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை சீரமைக்க வேண்டும்.

III. உச்சபட்ச பருத்தி கொள்முதல் காலங்களான டிசம்பர் முதல் மார்ச் வரை 5% வட்டி மானியத்தை நூற்பாலைகளுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களை தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

- - - - - -

**Text of the D.O. Letter dated 27-11-2021 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Union Minister of Textiles.**

I would like to bring to your kind attention, the representation received by me from Apparel Manufacturers of Tamil Nadu regarding the grave situation of cotton and yarn price volatility and its impact on the prices of fabrics and garments. As you are aware, textile industry is the 2nd largest employment provider in the State and Tamil Nadu accounts for 1/3rd size of the textile business of the country. The present crisis has led to mass cancellation of export orders and hardships in fulfilling long term export commitments.

If this situation is not reined in, large number of apparel and home textile units may soon become unviable resulting in closure and consequent large scale unemployment and industrial unrest.

I understand that one of the major reasons for the cotton price volatility is due to the imposition of 5% Basic Customs Duty (BCD), 5% Agriculture Infrastructure Development Cess (AIDC) and 10% Social Welfare Cess imposed on these components in the Union Budget 2021-22 which amounts to imposition of an overall import duty of 11%.

Another reason for spurt in cotton prices is the bulk discount offered by the Cotton Corporation of India (CCI) to the traders who procured almost 70% of Minimum Support Price (MSP) cotton auctioned by CCI at a lower rate during the cotton season due to availability of 90 days free period and thereafter speculated the market.

I, therefore request you to direct the concerned Ministries to intervene and take following policy measures to remedy the situation, protect the Textile Industry and prevent loss of jobs.

i) Remove 11% Import Duty levied on cotton to avoid further speculation in the coming months.

ii) Revamp the commercial terms and conditions prescribed by the CCI for e-auction of cotton by reducing the minimum lot size to 500 bales which is sustainable for the MSMEs. Further, yarn

manufacturers may be given priority in procurement of cotton over traders.

iii) Extend 5% interest subvention to the spinning mills towards procurement of cotton during peak season (December to March).

I would be grateful if you could kindly instruct the concerned Ministries to take necessary action in this regard at the earliest.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**